# ஜாமக்காரன்

# JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள். 1 தெச. 5:21

ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15

**VOLUME - 4** **Reg NO.TNBIL/2016/70171** **ISSUE - 9**

**SEPTEMBER 2020 TAMIL & MALAYALAM**

**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**

Mob.: No. **9894261333** இந்த எண். **SMS** உபயோகத்துக்காக மட்டும்

**0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com**

ஜா ம க் கா ர ன்

JAMAKKARAN



கர்த்தருக்குள் அன்பான வாசகர்களுக்கு,

யாவருக்கும் என் வாழ்த்துதல், கொரோனா கிருமி தாக்குதல் என்னையும் விட்டு வைக்கவில்லை. 150 நாட்கள் நான் எங்கும் வெளியே போகாமல் வீட்டுக்குள்ளேயே அடங்கி இருந்தும் எப்படியோ என்னை நிமோனியா வியாதி பிடித்தது. வெளி அடையாளங்கள் எதுவும் இல்லாமல் இருமல் தும்மல் சளி தொல்லை எதுவும் இல்லாதிருந்தும் ஒரு பரிசோதனைக்காக ஸ்கேன் எடுத்துப் பார்த்தார்கள். நுரையீரலில் ஒரு சிறு பகுதி சளி மூடியிருந்தது. நுரையீரலின் அடிபாகத்தில் ஒரு கோடு போட்டார்போல் கொரோனா கிருமி இருப்பதும் கண்டு பிடிக்கப்பட்டது. சரியான நேரத்தில் மிகவும் ஆரம்ப நிலையில் கிருமி தொற்று இருப்பதால் வீட்டில் வைத்து கவனிக்காமல் ஆஸ்பத்திரியில் சேர்க்கச் சொல்லி விட்டனர். உடனடியாக சிகிச்சை தொடங்கினர். ஆஸ்பத்திரியில் நாங்கள் இருக்கும்போது உதவிக்கு யாரையும் அனுமதிக்கவில்லை. தனி அறையில் நானும் என் இயேசுவும் மட்டுமே இருந்தோம்.

பிராண வாயு (ஆக்சிஜன்) மூக்கு வழியாக செலுத்தப்பட்டது. **ஆன்டிபயாடிக், வைரஸ் கிருமியை** கொல்லும் மருந்தொன்றுமாக மருந்துகள் மளமளவென்று

நரம்பு வழியாக ஏற்றப்பட்டது. ஒவ்வொரு மணி நேரத்தையும் ஒவ்வொரு நாளையும் கடத்துவது பெரும் பாடாகிவிட்டது. இதில் பயங்கரம் என்னவென்றால் முதல் 5 நாட்கள் என்னால் ஜெபம் செய்யமுடியவில்லை. பைபிள் வாசிக்க மனமுமில்லை. அந்த கொடுமையான நேரங்களில் இயேசுவே ! இயேசுவே ! என்று மட்டும் கூற முடிந்தது. கவிழ்ந்தே படுத்திருந்தேன்.

வேளா வேளைக்கு நல்ல உயர்தர சாப்பாடு கொடுக்கப்பட்டது. ஆனால் சாப்பிட மனமில்லை. சிக்கனில் இரண்டு விதம், சாம்பார், தயிர் இப்படி நல்ல உணவு தரப்பட்டது. மாத்திரை சாப்பிட கொஞ்சமாவது உணவு சாப்பிட்டு வயிற்றை நிறைக்க வேண்டும் என்பதற்காக கொஞ்சம் சாப்பிட்டேன். **பேரிச்சை பழ கொட்டை** போல 10 விதமான மாத்திரைகளை 3 நேரம் விழுங்கினேன். எப்படியோ உங்கள் அனைவருடைய ஜெபங்கள், ஜெப குழுக்களாக, T.V. youtube வழியாக எனக்காக ஜெபித்த அத்தனை பேருக்கும் நன்றி கூறுகிறேன்.

கர்த்தரின் பெரும் கிருபையால் கொரோனா வியாதியிலிருந்து **சுகம் பெற்று** 2020 அக்டோபர் மாதம் 8ம் தேதி வீடு வந்து சேர்ந்தேன். **அக்டோபர் மாதம் 9ம் தேதி என் திருமண நாள்.** திருமண நாளில் **வெகு தூரத்தில் என் மனைவி நிற்க,** நான் என் படுக்கை அறையிலிருந்துகொண்டே **கைபேசி வழியாக ஜெபித்து நாங்கள் இருவரும் கர்த்தரை துதித்தோம்.** கொரோனா சூழ்நிலையில் **யாரும் யாரையும்** பக்கமாகக்கூட நின்று பேச முடியாத நிலை மிக மிக மோசமானதாகும். எங்கள் **வாழ்க்கையில்,** கேட்டிராத, வேத புத்தக **சரித்திரத்தில் மட்டுமல்ல உலக சரித்திரத்தில்கூட** கேட்டிராத **மிக மோசமான** நிலை இது என்பது உண்மை.

☐ **சங்கீதம்** 90:10ல் கர்த்தர் மனிதனுக்கு அளித்த **ஆயுசு நாட்கள் 70 வருஷம்,** பெலத்தின் மிகுதியால் **ஆயுள் 80 வருடமாக** நீடித்தாலும் அது வருத்தமும் சஞ்ஜலமுமாம், அதுவும் சீக்கிரமாய் கடந்து போகும் என்று வேதம் கூறுகிறது. எனக்கு **80 வயது** என் மனைவிக்கு **78-79 வயது** கடந்து போய் கொண்டிருக்கிறோம்.

**என் தகப்பனார்** 76ம் வயதில் **இறந்தார்.** என் **தாயார் 96ம் வயதில் இறந்தார்.** இதில் **பரம்பரை** (ஜெனிடிக்) அடிப்படையில் **என் ஆயுள் நீள்வது** என் **தகப்பன் வழியா? என் தாயின் வழியில்** என் **ஆயுள் நீளப்பட்டிருக்கிறதா?** என்பது தெரியவில்லை. எல்லாருடைய **காலங்களும்** கர்த்தருடைய **கரத்தில் வரையப்பட்டிருக்கிறது.**

என்னைப்பற்றியும் **என் கையில் கொடுக்கப்பட்ட** ( Mission ) வித்தியாசமான **ஜாமக்காரன் பணி** எதுவரைக்கும் நடக்கும் என்பது யாருக்கும் தெரியாது. ஆகவே எத்தனை

மாதங்கள் எத்தனை வருடங்களானலும் **என் ஆயுள் முடியும் கடைசி நேரம்** வரை என் **ஜாமக்காரன்** பணி தொடரும்.

- ☐ என் வாசகர்களுக்கு நான் தெரிவிக்க விரும்புவது **கொரோனாவை** உலகில் யாராலும் தடுக்க முடியாது. அது **எந்த ரூபத்திலும்** உங்களை சந்திக்கும்.

உலகிலேயே மிக அதிக பாதுகாப்பு **அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப்** அவர்களுக்குத்தான். அவர் படுக்கை அறையை விட்டு பாத்ரூம் சென்று வந்தால் **முழு உடல் பரிசோதனை** சகல அவயவங்களின் நிலை ஆகியவை **உடனுக்குடன் பதிவு** செய்யப்படும். உடை உடுத்தி தன் இரகசிய அறையிலிருந்து **தன் அலுவலகத்துக்கு** வந்து சேரும் வரை அவர் ஒவ்வொரு வாசலையும் தாண்டும் போதும் **உடல் பரிசோதனைகள்,** அவர் அறியாமலே **கம்ப்யூட்டரில்** பதிவாகி அவரின் **சிறப்பு மருத்துவர்** அறைக்கு வந்து சேர்ந்துவிடும்.

கடந்த மாதம் வரை கொரோனா கிருமியின் சிறிய தாக்கமும் இன்றி தேர்தல் வேலைகளை டிரம்ப் அவர்கள் கவனித்தார். அப்படியிருக்க, **திடீரென்று கொரோனா கிருமி டிரம்பிற்குள் வந்தது எப்படி?** உடனே **மூச்சு திணறல்** ஏன் ஏற்பட்டது ? அப்படியே அவர் **ஆஸ்பத்திரியில்** சேர்க்கப்பட்டார், **மனைவிக்கும்** தொற்று உறுதியாக்கப்பட்டது. **ஆக்சிஜன்** கொடுக்கப்பட்டது. சில நாட்களில் **சுகம் பெற்று** வெளியே வந்தார். ஆனால் **மறுபடியும் ஆஸ்பத்திரியில்** அவர் சேர்க்கப்பட்டார்.

ஆகவே எப்படிப்பட்ட **நவீன பாதுகாப்புகள்** இருந்தாலும் இந்த கொரோனா நம்மை சந்திப்பதை **நாம் தவிர்க்கமுடியாது.** இரத்த கோட்டைக்குள் நான் இருக்கிறேன் என்று கூறிய ஊழியருக்குள் கொரோனா எப்படி நுழைந்தது ? அதனால் இப்போது நாம் செய்யவேண்டியது **கொரோனா** தாக்கத்தால் **உண்டான விளைவுகளை** நேருக்குநேர் **சந்திக்க நம்மை தயார்படுத்திக் கொள்வோம்.** ஒரு வேளை **பிள்ளைகள்** மரிக்கலாம். **கணவன்** அல்லது **மனைவி** மரிக்கலாம், **பென்ஷன்** மூலமாக **முழு குடும்பமும்** சாப்பிட்டு வாழ்ந்துகொண்டிருந்த நேரத்தில் **பென்ஷன் வாங்கிய** தகப்பனாரின் **மரணம்** குடும்பத்தையே உலுக்கிவிடும்.

அந்த சூழ்நிலையை நீங்கள் சந்தித்துதான் ஆக வேண்டும். உங்களை தயார்படுத்திக்கொள்ளுங்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளை சந்திக்கும் **விசுவாசிகளான** நாம் **அவிசுவாசிகளை** போல கலங்காமல் **இனி அடுத்து** செய்ய வேண்டியது என்ன ? சாப்பாட்டுக்கு **யாரிடமும் கை ஏந்த முடியாது !** ஆனால் நம் **ஆண்டவர் மிகவும் நல்லவர்** அவர் ஒருபோதும் **தன் பிள்ளைகளை** கைவிட மாட்டார்.

நான் ஆஸ்பத்திரியில் தனிமையில் இருந்தபோது.... என் மனதில் வந்த பாட்டின் வார்த்தை இதுதான்

சிங்க கெபியோ சூளை நெருப்போ
அவர் என்னை **காத்திடுவார்**
அவரே **என்னை காப்பவர்**
அவரே **என்னை காண்பவர்**

அடுத்த வார்த்தைகள் என் நினைவில் இல்லை. இந்த பாடல் நல்ல தைரியத்தை கொடுத்தது. வேதத்தில் ஒரு சம்பவம், அன்றொரு நாள் **இரவு முழுவதும்** இராஜாவால் தூங்க முடியவில்லை. ஆனால் **தானியேலோ சிங்கத்துடன்**சேர்ந்து **கதகதப்பான போர்வை** போர்த்தியதைப்போல் **அயர்ந்த நித்திரையில்** ஆழ்ந்தான். நாளை **என்ன நடக்கப்போகிறது** என்பதை பற்றி அவன் **கவலையற்றவனாக** அப்படி அவன் **நித்திரைக் கொள்ள காரணம்!** தான் **ஆராதிக்கும் தெய்வத்தை** குறித்து **மிக நன்றாக அறிந்திருந்தான்.** யோசேப்பு தவறு எதுவும் செய்யாமலே ஜெயிலில் அடைக்கப்பட்டான். ஆனால் வேதம் என்ன கூறுகிறது தெரியுமா ? ஆதி. 39:23. கர்த்தரும் யோசேப்புடன் கூட ஜெயிலில் இருந்தார் என்று கூறுகிறது.

இதே **நம்பிக்கையுடன்** நாம் யாவரும் வாழ்வோம். **வாழ்வோ சாவோ எல்லாவற்றையும் எதிர்கொள்வோம்.**

இந்த ஜாமக்காரனில் கர்த்தர் **என்னைக் குறித்து** எழுதும் கடிதம் ஒருவேளை என் **கடைசி அத்தியாயமாககூட** இருக்கலாம். அல்லது **புது அத்தியாயம்** கர்த்தர் **தொடங்கவும் செய்யலாம்.**

**கர்த்தர் அனுமதித்தால்** அடுத்த ஜாமக்காரன் மூலமாக நாம் சந்திப்போம். **நான் படுக்கையில்** இருந்த போது **நீங்கள் அனுப்பிய காணிக்கை** யாவும் கிடைத்தது. சிலர் **டாக்டர் உயிரோடு இருக்கிறார்** என்று அறிந்தால் அதன்பின் **காணிக்கை அனுப்புவோம்** என்று **தயக்கத்தோடு இருந்ததாக** தொலைபேசி மூலம் அறிந்தேன்.

தேவ கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக.

2020 **ஜுலை & ஆகஸ்ட்** மாத ஜாமக்காரன் உடனே அனுப்ப ஏற்பாடு செய்து விட்டேன்.

டாக்டர் **புஷ்பராஜ்**

# கனமான ஊழியம்

**ஆரோனைப்போல் தேவனால் அழைக்கப்பட்டாலொழிய ஒருவனும் இந்த கனமான ஊழியத்துக்கு தானாய் ஏற்படகிறதில்லை. எபி.5:4**

இந்த குறிப்பிட்ட வசனத்தில கனமான ஊழிய அழைப்பைப்பற்றி கூறப்பட்டுள்ளது. இந்த வசனம் எந்த **பாஸ்டரும், மிஷனரிகளும் பிரசங்கிமார்களும்** உபதேசிக்கிற பைபிள் டீச்சர்களுக்கும் பொறுந்தாது. ஆண்டவர் என்னை இந்த கனமான ஊழியத்துக்கு அழைத்தார் என்று என்று எந்த ஊழியரும் கூறக்கூடாது. **டாக்டர் புஷ்பராஜ்** ஆகிய நான் கூட இந்த **கனமான ஊழியத்தை** கர்த்தர் ஆரோனைபபோல **எனக்கு கொடுத்தார் என்று கூறக்கூடாது.**

## எது கனமான ஊழியம்

**மோசே** காலத்துக்கு பிறகு கர்த்தருடைய **லேவியர்** (ஆசாரிய) பணிக்கு **12 கோத்திரத்தில்** உள்ளவர்களுக்குள் கடும் **பதவி போட்டி** உண்டானது. **லேவி ஊழியத்தில்** நல்ல வருமானம் இருந்தது. பலி பீடத்தில் வரும் இறைச்சிகளில் காணிக்கைகளில் **தசம பாகங்களை** லேவி குடும்பத்தார் அனுபவிக்க உரிமை கொடுக்கப்பட்டது. அதனால் இஸ்ரவேல் மக்கள் மோசே சொன்னாலும் கேட்கமாட்டோம்.லேவி பணிக்கு போட்டி போடுவோம். **கர்த்தரே சொன்னால்தான்** கீழ்படிவோம் என்று தேவனை **பரிட்சைப் பார்க்க** துணிந்தார்கள். கர்த்தருக்கு **கோபம் மூண்டது** என்றாலும் மோசேயிடம் கர்த்தர் பேசினார். நான் கூறுவதை நீ 12 **கோத்திர தலைவர்களிடம்** கூறு. நாளை அவர்களுடைய **கோலை** எடுத்து வந்து அதில் 12 **கோத்திர பிதாக்களின்** பெயர் எழுதி அதை பெட்டிக்குள் வைக்கசொல், ஆரோனின் **கோலிலும்** பெயர் எழுதி அதே பெட்டிக்குள் வைத்துவிடு. மறுநாள் பெட்டியை திறந்து பார். **எந்த கோலில்** இலை **துளிர்விட்டுள்ளதோ** அந்த **கோலுக்கு** உரியவன்தான் இந்த கனமான ஊழியத்துக்கு நான் தெரிந்துகொண்ட ஊழியன் என்றார்.

**எண்ணாகமம் 17:8** அப்படியே அந்த 12 கோத்திரத்தார்களின் **கோல்களை** கர்த்தருடைய சமூகத்தில் வைத்தான். மறுநாள் எல்லாரும் பார்க்க ஆரோனின் **கோல் மட்டும் துளிர்ந்திருந்தது,** மட்டுமல்ல அது **துளிர்விட்டு** பூபூத்தது **வாதுமை பழங்களையும்** கொடுத்தது.

**கவணியுங்கள் !**

சாதாரண காய்ந்த **மரத்தாலான கோல்** செதுக்கப்பட்டு வழவழப்பாக்கி வைக்கப்பட்டது. அந்த **கோல் துளிர்த்து,** பூபூத்து, **வாதுமை** பழங்களையும் கொடுத்தது என்றால் தெய்வத்தின் **அற்புத செயலை** என்ன சொல்ல ?

**பதவி போட்டி** அந்த காலத்திலேயே உண்டானது. அந்த அற்புத சம்பவத்தை கண்டதற்கு பிறகு மக்கள் **பயந்து நடுங்கிப்போய்** கர்த்தர் எங்களை **கொன்றுவிடகூடாது** என்று அலறினார்கள்.

- ☐ **லேவி கோத்திரத்துக்குள்ளே விசேஷம்** என்னவென்றால் மற்ற கோத்திரத்தார் எந்த ஊரிலும் தங்களுக்கு **சொந்தமாக நிலம்** வாங்கலாம் **வீடு கட்டலாம்**. ஆனால் **ஆரோன்** என்ற **லேவி** குடும்பம் மட்டும் தனக்கென்று சொந்தமாக **எந்த நிலமும், சொத்தும் வாங்கக்கூடாது** பலிபீடத்துக்குவரும் எதையும் அவனும் அவன்குடும்பமும் புசிக்கலாம். அனுபவிக்கலாம். அப்படியானால் **லேவி** கோத்திரதிற்கு **சொத்து ஒன்றுமில்லையா?** என்று கேட்கலாம்.இதற்கு கர்த்தர் கூறும் **பதிலை** பாருங்கள்.

இஸ்ரவேல் புத்திரர் நடுவில் **நானே உன்பங்கும்** உன்**சுதந்திரருமாய் இருக்கிறேன்.** வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தராகிய நானே **உன் சொத்து, உன் பங்கு உன் சுதந்திரம்** என்றார். எண். 18:20

இப்படியிருக்க இன்று பல பிஷப்மார் **பினாமி** பெயரில் **சொத்து,** பினாமி பெயரில் பணத்தை **வங்கியில்** செலுத்துவது என்பதை சர்வ சாதாரணமாய் பல CSI டையோசிஸ்களில் நாம் பார்க்கிறோம். இதில் பல பிஷப்மார் தங்கள் வருமானத்துக்கு அதிகமாக சொத்துகள், வீடுகள் வாங்கியதால் CBIயில் அகப்பட்டார்கள். தன்னையும் தன் **அழைப்பையும், தகுதியை** புரிந்துகொள்ளாதவர்களாய் எவ்வளவு **கேடு கெட்ட செயலை** இந்த சில பிஷப்மார் செய்கிறார்கள் !

## எது கனமான ஊழியம்

**12 கோத்திரத்தையும்** முழு **இஸ்ரவேல் மக்களையும்** வழி நடத்தும் ஊழியம் தான் கனமான ஊழியம் ஆகும். இந்த காலத்தில் அப்படிப்பட்ட **கனமான ஊழியம்** உண்டா?

பொதுவாக CSI, லூத்தரன், **மார்தோமா** போன்ற மெயின்லைன் சபைகளும் **பெந்தேகோஸ்தே** சபைகளில் TPM, ( CPM ) சபைகளையும் சேர்க்கலாம். **இந்த சபைகளின்** தலைமை ஸ்தலமாயிருப்பது சென்னை TPM **சென்ட்ரல்** சபையாகும். அதில் முக்கியமான

**நான்கு பாஸ்டர்களில்** ஒருவர், அவர்தான் இப்படிப்பட்ட **கனமான ஊழியத்துக்கு தகுதியானவர்.** இவர்கள் பேசும் **அன்னிய பாஷை** உளரலை கவணிக்க வேண்டாம், மற்றப்படி அவர்களுக்குள் ஒரு **கட்டுப்பாடு** உண்டு. **தலைமை சொன்னால்** சொன்னதுதான், மறுவார்த்தை பேசாமல் எல்லாரும் தலைமைக்கு கட்டுப்பட்டு அடங்கி நடப்பார்கள். அதுதான் TPM சபையின் சிறப்பாகும்.

- ☐ அடுத்து **அன்னிய பாஷை** பேசும் **பெந்தேகோஸ்தே சபைகளில்** மிகப்பெரிய அதிக **எண்ணிக்கை உள்ள** AOG **அசெம்பளி ஆப் காட் சபையாகும்.** இந்த சபைகளின் ஆசியா முழுமைக்கும் **தலைவராக** இருப்பவர் **பாஸ்டர்** D. **மோகன்** அவர்கள் ஆகும். ஆனால் இவர் வகிக்கும் ஊழியம் வேதம் கூறும் **கனமான ஊழியம்** அல்ல. காரணம் இவரால் தனக்கு கீழே உள்ள ஒரு AG **சபையும்** இவர் சொல்லுக்கு கீழ்படிவதில்லை. ஒவ்வொரு AG சபையும் அந்தந்த **சபை பாஸ்டரின்** கட்டுப்பாட்டுக்குள் **சுதந்திரமாக** இயங்குவதாகும். ஒரு AG சபை பாஸ்டர்மேல் ஒரு புகார் வந்தால் இவரால் அந்த பாஸ்டரை தண்டிக்க முடியாது.

மறைந்த **பாஸ்டர் அருள்** போன்ற இன்னும் பல AG **சபையில்** முதிர்ந்த பாஸ்டர்கள் **பாஸ்டர் மோகனை** பற்றியும் அவர் தவறுகள் பற்றியும் **வால்போஸ்டர்** அடித்து பாஸ்டர் மோகனை கிழி கிழி என்று கிழித்துவிட்டார்கள். **ஆசியா** தலைவர் **பாஸ்டர் மோகனால்** ஒன்றும் செய்ய முடியவில்லையே! ஆகவே AOG சபை பிரம்மாண்டமான அதிக எண்ணிக்கையுள்ள சபைகளாயிருந்தாலும் பாஸ்டர் மோகன் அவர்கள் **கனமான ஊழியத்திற்கென்று** கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்டவரல்ல !

- ☐ IPC **சபை** AG சபைக்கு சமமாக **எண்ணிக்கையில்** அதிகம் உள்ள **அன்னிய பாஷை** என்ற பெயரில் உளரும் சபையாகும். இந்த IPCக்கு **தலைமை ஸ்தானம்** கேரள மாநிலத்தில் **கும்பநாடு** என்ற ஊர் ஆகும். இந்த சபையிலும் வருடா வருடம் பதவிக்காக அடி, வெட்டு குத்து என்று பாஸ்டர்கள் பதவிக்காக போட்டியிடுவார்கள். இவர் எந்த தலைமைக்கும் அடங்காதவர்களாக இருக்கிறார்கள். இவர்களும் கர்த்தர் கூறும் **கனமான ஊழியத்துக்கு** கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் **அல்ல !**
- ☐ **மெத்தடிஸ்ட் சபை** இதன் **தலைமை ஸ்தானத்தில்** உள்ளவர்க்கு **பிரசிடென்ட்** என்ற பெயர் இருந்தது. இப்போது அதை நீக்கி **பிஷப்** என்று பெயரை மாற்றிக்கொண்டனர். இவர்கள் சட்டப்படி 5 வருடத்துக்கு **ஒரு தலைவர்** தெரிந்தெடுக்கப்படுவார். சபைகள் அந்தந்த பாஸ்டர்களின் கீழ் சுயமாய் இயங்குபவை ஆகும். **ஒரே தலைமையின்** கீழ் கட்டுப்பாட்டோடு இயங்காத காரணத்தால் இவர்களும் கர்த்தர் கூறும் **கனமான ஊழியத்துக்கு** தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அல்ல !

☐ **லூத்தரன் சபை** எந்த புதிய பிஷப் பதவிக்கு வந்தாலும் இவர்களின் **ஆயர்கள்** பிஷப்புக்கு கீழ்படிபவர்களல்ல. லூத்தரன் சபை **பல துண்டுகளாக** உடைந்து ALC என்றும் TELC என்றும் பிரிந்து கிடக்கிறது. இவர்கள் கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட **கனமான ஊழியத்துக்கு** தகுதியானவர்கள் அல்ல !

☐ இப்போது கடைசியாக காணப்படுவது CSI & CNI சபைகளாகும். இவைகள் **மெயின் லைன்** சபைகள் ஆகும். இவர்கள் தான் **வேதம் கூறும்** கர்த்தரால் கனமான ஊழியத்துக்கு தெரிந்துகொள்ளப்பட்ட சபைகளாகும்.

காரணம், ஒவ்வொரு டையோசிஸ் **பிஷப்மார்களும்** அளவுக்கு **அதிகமான ஆளுமை** (பவர்) **சக்தியும் மிகுந்த அதிகாரமும்** படைத்தவர்களாகும். பிஷப்மார் நினைத்தால் யாரையும் சபையை விட்டு நீக்கலாம். CSI சட்ட திட்டங்களை தனக்கு ஏற்றபடி இந்த பிஷப்மார்கள் மாற்றலாம். யாரும் இவர்களை கேள்வி கேட்க முடியாது. **அரேபியா** நாட்டிலிருந்து இந்தியா திரும்பி இரண்டு வாரத்துக்குள் திருமணம் நடத்தி செல்ல வேண்டுமானால் **பிஷப்பின்** தயவு வேண்டும். **ஜாமக்காரனில்** பல பிஷப்மார்கள்களின் **ஊழல்கள் பற்றியும் தவறான நவீன உபதேசத்தை பற்றியும் ஜாமக்காரனில்** பக்கம் பக்கமாக எழுதினாலும் CSI **சபை மக்கள் ஒருவரும் பிஷப்பை எதிர்த்து** கேள்வி கேட்பதில்லையே ! காரணம் பல விஷயங்களில் **பிஷப்மார்களின் தயவு** இவர்களுக்கு அவசியம். குறிப்பாக **CMC ஆஸ்பத்திரியில்** (வெல்லூர்) MBBS படிப்பை தொடங்க CSI சபை கிறிஸ்தவர்களுக்கு **ஸ்பான்சரிங் சலுகை** உண்டு. அப்படியே **இன்ஜினியரிங் கல்லூரி** இப்படி பல படிப்புகளுக்கு பிள்ளைகள் படிக்க **பிஷப்பின் தயவு** இவர்களுக்கு மிகவும் அவசியம். வேதவசனத்து விரோதமான முறையில், இரண்டாவது மூன்றாவது திருமணங்களை தன் பிள்ளைகளுக்கு நடத்த பிஷப் தயவு மிக அவசியம்

☐ இஸ்ரவேலர்களில் **12 கோத்திரத்துக்கும் லேவி**யர்களின் மேற்பார்வை உண்டு, அதோடு அவர்கள் கூறும் **சட்டதிட்டங்கள்**படிதான் 12 **கோத்திரங்களும் கீழ்படியவேண்டும்.** அந்தபடியே **தென் இந்தியாவில்** உள்ள CSIயின் **24 டையோசிஸ்களுக்கும் 24 பிஷப்மார்கள் உண்டு.** இவர்கள் **குருநில மன்னர்களைபோல** சர்வ அதிகாரம் பெற்றவர்கள் ஆகும். ஆகவேஇவர்கள் பதவிதான் **கனமான ஊழியம்** ஆகும்.

ஆரோனுக்கு கர்த்தர் **கனமான ஊழியத்தை** அருளினார். ஆனால் இந்த பிஷப்மார்களில் **பெரும்பாலானவர்களின் பிஷப் பதவிகளை பணம் நிர்னயிக்கிறதே!** ஆகவே CSIயில் **பிஷப் பதவி என்பது கர்த்தர் கொடுத்தல்ல.** இவர்கள் கர்த்தரால்

**அனுமதிக்கப்பட்டவர்கள்** என்று கூறலாம். அதனால் பல பிஷப்மார் தன் **பதவியின் அதிகாரத்தை**அநியாயத்துக்கும்**வஞ்ஜம்**தீர்ப்பதற்கும் லஞ்ஜம் வாங்கி பதவி உயர்வு கொடுப்பதற்கும் பிஷப்பதவியை பயன்படுத்துகின்றனர். தாங்கள் **பதவி பிரமாணம்** ஏற்ற உடன் தங்கள் அதிகாரத்தை **துஷ்பிரயோகம்** செய்கிறார்கள்.

☐ **பழைய ஏற்பாட்டு** காலத்தில் **தகுதியில்லாமல்** ஆலய திருப்பணி செய்தால் அந்த நிமிடமே **தேவ கோபம்** இறங்கி **உசியா ராஜா** போன்றோருக்கு **குஷ்டம் நெற்றியில்** உண்டாக்கி அதன்பிறகு அவன் **அரண்மனைக்கு** போகாமல் **பாளையத்துக்கு** புறம்பே **பிச்சைகாரர்களைப்போல்** தள்ளப்பட்டான். அதுபோல தண்டனை உடனுக்குடனே உண்டாகும்.

ஆனால் அதேசமயம் **புதிய ஏற்பாட்டு** சபை தொடங்கிய உடன் **தகுதியில்லாமல்** பிஷப்பதவியின் ஊழியம் செய்தால் **எந்த தண்டனையையும்** கர்த்தர் அவர்களுக்கு கொடுப்பதில்லை. காரணம், **கிருபையின்** காலம் இது. **தண்டனை வராததால்** அவர்கள் அதை **சாதகமாக்கிக்கொண்டு** துணிகரமாக **பாவ செயலில்** தொடர்ந்து ஈடுபடுகிறார்கள்.

☐ **கேரள மாநிலத்தில் மார்தோமா** என்ற சபை உண்டு. அந்த சபைகளில் சுமார் 8 பிஷப்மார்கள் உண்டு. பிஷப்மார்கள் ஒரு சிலரின் மேல் ஏராளமான **ஆண் புணர்ச்சி** குற்றச்சாட்டுகளும், **பெண்கள்** செக்ஸ் குற்றச்சாட்டுகளும் உண்டு. அதில் குறிப்பாக **பிஷப் ஐரேனியஸ் திருமேனி** என்று ஆரம்பகால பெயரில் அழைக்கப்பட்டவர்மேல்தான் **பெண் தொடர்ப்பு, சிறுபெண்களிடம்** இவர் செய்த செக்ஸ் சம்மந்தமான குற்றச்சாட்டுக்கள் மிக அதிகமாக **பதிவு செய்யப்பட்டு** போலீஸ் ஸ்டேசன் வரை புகார்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளது. மார்தோமா **மண்டலத்தில்** (பொதுக்குழு, ஜென்ரல் பாடி கூட்டத்தில்) இந்த செக்ஸ் குற்றச்சாட்டுகள் பற்றி கேள்விகள் எழுப்பப்பட்டது. **கோழஞ்சேரி மார்த்தோமா** பெரிய சபையின் **வாலிபர் சங்கத்தினர் வெளியிட்ட துண்டு பிரதிகள்** மூலமாகதான் **மார்தோமா சபையினர்** அந்த குறிப்பிட்ட பிஷப்பின் பாவ விவரங்களை அறிந்தனர்.

அந்த துண்டு பிரதியின் தலைப்பு, **குருக்கன் சொர்க்கம் போயாலும் கோழி பிடித்தம் நிறுத்துமோ ?** அதாவது **நரி பரலோகம்** போனால்கூட தன் வழக்கத்தின்படி **கோழியை திருடி தின்பதை** நிறுத்தாது என்பதாகும், இதை அப்படியே எடுத்து ம**லையாள பாஷையில்** நான் **ஜாமக்காரனில்** வெளியிட்டேன். இதன் விவரங்களை **164 தேசங்களும்** மற்றும்

**இந்திய முழுவதும்** அறிந்தது. பிரச்சனை சூடுபிடித்தது. **விசாரனை** என்ற பெயரில் **பிஷப்மார்** ஒன்று கூடி பேசி தீர்ப்பைக் கூறினர். குற்றசாட்டுகள் எதற்கும் ஆதாரம் இல்லை என்று கூறி அந்த பிஷப்மேல் உள்ள **குற்றசாட்டுக்கு** முற்றுபுள்ளி வைத்துவிட்டனர்.

அந்த குறிப்பிட்ட பிஷப்புக்கு அரசியல்வாதிகளின் குண்டாஸ்களின் பாதுகாப்பு இருந்தது. மார்தோமா சபையில் உள்ள பெரிய செல்வந்தர்களின் செல்வாக்கு நிறைய இருந்தது. பெரும்பாலான ஆயர்கள் அந்த பிஷப்பிடம் மிகவும் பயந்து கீழ்படிந்தனர். மேலே குறிப்பிட்ட விஷயம் ஜாமக்காரனில் வெளியிட்டதால் என் மேல் **மான நஷ்ட வழக்குக்கு** நோட்டீஸ் அனுப்பி என்னை **நீதிமன்றம்** வரும்படி **வக்கீல் நோட்டீஸ்** வந்தது. **வக்கீல் யாரையும்** நான் எனக்காக நானே வைக்காமல் கோர்ட்டில் வாதாட போகிறேன் என்று எழுதினேன். ஏனோ **பிரச்சனையை** அதோடு நிறுத்திக்கொண்டார்கள்.

அந்த குறிப்பிட்ட பிஷப் அவர்களுக்கு **மார்தோமா சபையின்** மிக **உயர்ந்த தலைமை** பதவியான **மெத்ரோபோலித்தா** என்ற பெயர் கொடுத்து **பதவி உயர்வு** கொடுத்து இப்போது அவர் கீழ்தான் அனைத்து **மார்தோமா பிஷப்மாரும்** ஆயர்களும் **சபைகளும்** இயங்கி கொண்டிருக்கிறது.

அவர்கள் **ஆராதனை ஒழுங்கின்படி** ஆலய ஆராதனை சடங்கில் அந்த பிஷப் **தன் கையில்** தூபகுற்று (தூப கலசம்) ஏந்தி **ஆல்டரில் ஆராதனை** நடத்துகிறார். தெய்வ தண்டனை அவர்மேல் **வரவில்லையே!** காரணம், **கிருபையின் காலம் !**

> **துர்கிரியைக்கு தக்க தண்டனை சீக்கிரமாய் நடவாதபடியால் மனுபுத்திரரின் இருதயம் பொல்லாப்பை செய்ய அவர்களுக்குள்ளே துணிகரம் கொண்டிருக்கிறது.** பிரசங்கி 8:11

ஆகவே ஆரோனின் **கனமான ஊழிய பொறுப்பு** மார்தோமா சபைகளில் இப்படிப்பட்ட பிஷப்மார் கையில் கர்த்தர் கொடுத்து அந்த பதவியை அனுமதிக்கிறார்.


## பெற்ற பிள்ளைகளின் பாவ வாழ்க்கையினால் பல பிஷப்மார் சாட்சியிழந்து போனார்கள்

பிஷப்மார்கள் பெற்ற **பாவம் செய்த பிள்ளைகளுக்காக டையோசிஸ் பணத்தை** சபை மக்கள் அறியாமல் பிஷப **டையோசிஸ்ஸிலிருந்து** எடுத்து செலவழிக்கிறார். இதற்கு

அந்தந்த டையோஸ்ஸில் உள்ள **லே-செயலர்களும்** நிர்வாகிகளும் உடந்தையாக இருப்பதால் **பிஷப்மார் லே செயலர்களுக்கு** அடிபணிந்து நடக்கிறார்கள். அவர்கள் **நீட்டுகிற இடத்தில்** கேள்வி கேட்காமல் கையெழுத்து போட்டு அவர்களுக்கு அடிமைகளாக இருக்கிறார்கள்.

## திருச்சி – தஞ்சை CSI டையோசிஸ்

**பிஷப் சீனிவாசகம்** அவர்களின் மகன் அழகான பெண்ணை காதலித்து திருமணம் செய்துகொண்டார். அந்த பெண் மிகவும் ஞானமுள்ளவர். பிஷப் எங்கு எங்கு சென்றாலும் **மருமகளை** கூட அழைத்து செல்வார். காலை உணவு சாப்பிடும் போது டையோசிஸ்க்கு வந்த கடிதங்களை பிரித்து விவரம் கூறுவார். அவற்றிக்கு **என்ன பதில் எழுதுவது** என்பதை பிஷப் கூற அவரும் பதில் எழுதி PA போல டையோசிஸ் நிர்வாகத்தை நடத்தி வந்ததார். இப்போது மகன் **அமெரிக்காவில் வேலை** கிடைத்து அமெரிக்கா சென்று விட்டார். அங்கு ஒரு **நீக்ரோ இன** கருப்பு பெண்ணை திருமணம் செய்து குடும்பம் நடத்தினார். தான் மறுபடியும் இந்தியா வந்து பெற்றோரை பார்க்கவேண்டும் என்றால் தன் **முதல் மனைவியை** வீட்டைவிட்டு துரத்த வேண்டும் என்றார். மகன்மேல் உள்ள பாசம் காரணமாக பிஷப் **மருமகளுக்கு** பணம் கொடுத்து **தாய் வீட்டுக்குபோக** சொல்லிவிட்டார். அவள் பிஷப் வீட்டின் முன் **உண்ணாவிரதம்** இருந்து பார்த்தாள். ஒன்றும் நடக்கவில்லை. அந்த பெண் என்னிடம் கேட்டுக்கொண்டதால் **நானே திருச்சி** சென்று அவர் பிரச்சனையில் தலையிட்டு பார்த்தேன். அதனால் பிஷப் **என்னை வெறுத்தார்.** இப்போது அந்த பெண் டிராவல் ஏஜென்ட் அலுவலகத்தில் வேலை கிடைத்து திருச்சியிலேயே வாழ்கிறார். இப்போது இந்த பிஷப் தன் மகனால் **சாட்சியிழந்த பிஷப்பாகிவிட்டார்.**



Rt. Rev. DURAI

## கோயமுத்தூர் CSI டையோசிஸ்


CSI **பிஷப்** துரை அவர்களின் ஒரே மகள் மெத்த படித்தவள் **குன்னூர்** (ஊட்டி) CSI சபையில் உள்ள ஆட்டோ டிரைவரும் – ஆட்டோ புரோகருமான ஒருவனை **காதலித்து ரிஜிஸ்ட்டர்** திருமணம் செய்து **6 மாதங்கள்** இரகசியமான ஒரு இடத்தில் குடும்பம் நடத்தினார்கள். அப்போதுதான் **பிஷப் துரை** அவர்கள் **பிஷப்பாக** பதவி பிரமானம் எடுத்திருந்தார். எப்படியோ மகளை கண்டுபிடித்து தன் **பிஷப் பதவி**

**அந்தஸ்துக்கு** ஏற்ற மாப்பிள்ளையை ஏற்பாடு செய்து அவளின் பழைய கணவனை மறக்க அவளை மேல் படிப்புக்கு **ஆஸ்திரேலியா** நாட்டுக்கு அனுப்பினார். ஆனால் அவள் அங்கு தொடர்ந்து படிக்காமல் இந்தியா திரும்பி விட்டார். உடனே பிஷப் தன் அந்தஸ்துக்கு இழுக்கு வரக்கூடாது என்று வேறு ஒருவனை கண்டுபிடித்து அவனுக்கு அவளை **அவசர கலியாண** ஏற்பட்டை **திருட்டுதனமாக** நடத்திமுடித்தார். அந்த திருமணம் (சேலம்) **அஸ்தம்பட்டி இம்மானுவேல் ஆலயத்தில்** வைத்து நடந்தது. ஆலயத்தை சுற்றிலும் **போலீஸ்சை நிறுத்தி** CSI முறைப்படி 3 வாரம் சபை மக்களுக்கு திருமண அறிவிப்பு கொடுத்தபின்தான் திருமணம் நடத்த வேண்டும். அந்த சட்டத்தை மாற்றி CSI சட்டத்தை **தூக்கி எறிந்துவிட்டு** திருமண ஆராதனையை 15 நிமிடத்தில் நடத்தி **தாலி கட்ட வைத்து** அவளை கூட்டி சென்று விட்டார்.

**மகள்** மீதுள்ள பாசம், **பிஷப் அந்தஸ்துக்காக** பிஷப் அவர்கள் தன் **சாட்சியை இழந்தார்**. அதன்பின் **பாலிடெக்னிக்** பணம் **பல கோடிகளை** தன் **வங்கி கணக்கில்** சேர்த்துக்கொண்டதை **ஜாமக்காரன்** வெளியிட்டது. போலீஸ் பிடித்தது **பிஷப் சிறையில் தள்ளப்பட்டார்.**

CSI **சபைகளின்** வரவலாற்றில் **பிஷப் துரை** அவர்களை CSI **சினாட்** முதல் முறையாக பிஷப் பதவியிலிருந்து **டிஸ்மிஸ்** செய்து அவரை **பதவி இழக்க** செய்தது. இப்போது பரிதாபமாக வாழ்கிறார். அவருக்கு கொடுக்கப்பட்ட **கனமான ஊழியம்** உதாசினம் செய்யப்பட்டதால் **சாட்சியிழந்தவராகி** ஆயர் ஊழியத்தை கூட செய்ய இயலாமல் **சாட்சியிழந்தார்.**

## தூத்துக்குடி – நாசரேத் CSI டையோசிஸ்




Rt., Rev. Deva sagayam

**தூத்துக்குடி** CSI டையோசிஸ் பிஷப் அவர்கள் மிலிட்டரி லைன் CSI சபை ஆயராக இருக்கும் போது மிக நல்லவராகவே இருந்தார். என்னை அவர் சபைக்கு அழைத்து நான்கு நாட்கள் கூட்டம் நடத்தினார். என் பிரசங்கத்தை கேட்டு இதுமாதிரி வேத பாடம் இதுவரை நான் கேட்டதில்லை. இந்த பிரசங்கம் நம் அனைத்து டையோசிஸ்ஸில் உள்ள சபைக்கு மிக அவசியம் என்று வானளாவ புகழ்ந்தார்.

**பிஷப்பதவி** வந்தவுடன் **இவர் சுபாவம்** மாறிவிட்டது. தன் **மகனின்** வாழ்க்கையில் **நாடார்** அல்லாத **வேறு ஜாதி**

பெண்ணை அவர் மகன் திருமணம் புரிந்து குழந்தைகள் பெற்ற சில மாதங்களிலேயே மகனின் **இரண்டாவது மனைவியின்** குடும்பத்தினர் **பிஷப்பை பிளாக்மெயில்** செய்ய ஆரம்பித்துவிட்டனர். ஒவ்வொரு முறையும் 40 லட்சம், 50 லட்சம் என்று பிஷப்பிடம் கேட்டு வாங்க ஆரம்பித்தனர். டையோசிஸ் நிர்வாகிகள் மத்தியஸ்தம் செய்தும் அவர்கள் **டார்சர்** ஓயவில்லை.

இனி டையோசிஸ் மூலமாக பணம் கொடுக்க முடியாது. டையோசிஸ்ஸில் பணம் இல்லை என்று **லே-செயலர்** கைவிரித்துவிட்டார், இப்போது பிஷப்பின் பார்வை **நாசரேத்** பெரிய சபையில் உள்ள **சில கோடி பணத்தின்** மீது திரும்பியது. ஆனால் நாசரேத் சபை நிர்வாக்குழு இந்த பணம் **நாசரேத்தில் பல் மெடிக்கல் கல்லூரிக்காகவும், பாலிடெக்னிக்** பணிவதற்காகவும் மக்கள் கொஞ்ச கொஞ்சமாக காணிக்கை கொடுத்து சேர்த்தது. இதிலிருந்து ஒரு பைசா கூட தரமுடியாது என்றனர். உடனே **பிஷப்** பணம் **எடுக்க தடையாக** இருக்கும் **அலுவலக கணக்கர்** அகஸ்டின் என்பவரை எந்தவித காரணமும் காட்டாமல் அவரை **டிஸ்மிஸ் செய்து** டிஸ்மிஸ் ஆர்டரை **கையில் கொடுத்து** அவரை அலுவலகத்திலிருந்து வெளியே போக சொல்லிவிட்டனர். 17 வருடங்கள் வேலை செய்த அனுபவம் இருந்தும் அவர் எத்தனை கெஞ்ஜியும் **பிஷப் இரக்கம்** பாராட்டவில்லை.



**மறுநாள் காலை** வழக்கத்துக்கு மாறாக சரித்திர பிரசித்திபெறற **நாசரேத்** CSI ஆலய மணி அடிக்க, ஆராதனை இல்லாத நேரம் எதற்கு இந்த ஆலய மணி ? ஊரே **ஆலயத்தின் முன்கூடி விட்டது.** சரித்திர சிறப்பு வாய்ந்த அந்த **ஆலய கோபுரம்** மற்ற ஆலய கோபுரத்தை விட 180 அடி உயர்ந்தது. **கோபுரத்தின் உச்சியில்** டிஸ்மிஸ் செய்யப்பட்ட தம்பி **அகஸ்டின், அவர் மனைவி இரண்டு பிள்ளைகள் கோபுர உச்சியில்** நின்று என் **டிஸ்மிஸ் ஆர்டரை** பிஷப் வாபஸ் வாங்காவிட்டால் **நால்வரும்** கீழே விழுந்து **தற்கொலை** செய்ய போகிறோம் என்றனர். **போலீஸ் வந்தது** அவர்களும் எவ்வளவோ சமாதானம் கூறியும் தங்கள் **தற்கொலை** தீர்மானத்தில் உறுதியாக இருந்தார்கள். அனைத்து




**தினசரி பத்திரிகை,** TV **நிலையத்தினர் ஆகிய மீடியாக்கள்** குவிந்தனர். உடனே போலீஸ் அதிகாரி பிஷப்புக்கு **நிலைமையை** கூறி விபரீதம் நடக்குமுன் **டிஸ்மிஸ் ஆர்டரை வாபஸ்** பெற்று அதன் ஆர்டர் அனுப்புங்கள். இல்லை என்றால் நீங்கள் அனைவரும் **ஜெயிலுக்கு போக** வேண்டிவரும் என்று எச்சரித்தார். உடனே FAX மூலம் **டிஸ்மிஸ் ஆர்டரை** வாபஸ்பெறுவதாக முறைப்படி கடிதம் அனுப்பி வைத்து அவர்கள் நால்வரும் கீழே இறக்கப்பட்டார்கள். பிரச்சனை தற்காலிகமாக சுமூகமாக தீர்த்து வைக்கப்பட்டது.

ஆனால் மறுநாள் காலை வழக்கமாக **அகஸ்டின்** அவர்கள் அலுவலகத்துக்கு வந்தார். ஆனால் அவர் அறையில் பூட்டு உடைக்கப்பட்டு உள்ளே இருந்த **கம்ப்யூட்டர்கள் மெடிக்கல் காலேஜ்காக சேமித்து வைத்த வங்கி பண டெபாசிட்டுகள்.** அது சம்பந்தமான அனைத்து **தாஸ்தாவேஜிகளும்** இரவோடிரவாக **தூக்குக்குடி பிஷப்** தன் அலுவலகத்துக்கு எடுத்து வர ஏற்பாடு செய்துவிட்டார் என்பதை அறிந்து **சபை மக்கள்** மிகவும் ஆத்திரம் அடைந்தனர். ஆனால் **பிஷப்பின் அதிகாரத்துக்குமுன்** ஒன்றும் செய்யமுடியாமல் போனது.

**பிஷப்பின் மகன்** செய்த பாவத்துக்காக மகன் **மனைவியின் குடும்பத்துக்கு** டையோசிஸ் பணம் **கொண்டுசெல்லப்பட்டது என்ற** செய்தி வெளியானது. பிஷப் அவர்களின் புகைப் படத்தோடு அனைத்து **தினசரி வார பத்திரிகைகள் பிஷப் அவர்களின் செயலை** பற்றி மிக மோசமாக எழுதியது. யாருக்கு அவமானம். **புறமதஸ்தர்கள்** மத்தியில் **தேவ நாமம் தூஷிக்கப்பட்டது.**

சொந்த **மகனால் சாட்சியிழந்த** பட்டியலில் **தூத்துக்குடி பிஷப்** அவர்கள் இடம் பெற்றது கிறிஸ்தவர்களுக்கு **தலைகுனிவு. ஆரோனைபோல** கனமான ஊழியம் தான், அவருக்கு அனுமதிக்கப்பட்டது. ஆனால் **தகுதியில்லாத நபரிடம் பிஷப் பதவி** அனுமதிக்கப்பட்டது.

## தெற்கு கேரள C.S.I. டையோசிஸ்



Rt. Rev. Samuel Amirtham


பிஷப் சாமுவேல் அமிர்தம் அவர்கள் தெற்கு கேரளா டையோசிஸ்ஸின் மாத பத்திரிகையில் எல்லா தெய்வமும் ஒன்று என்றும், எல்லா மதங்களும், விக்கிரக தெய்வங்களும் ஒன்று என்றும். இயேசு ஒருவர் மட்டும்தான் அற்புத சுகம் தர முடியும் என்கிற கிறிஸ்தவர்களின் எண்ணம் மாற வேண்டும். விக்கிரக தெய்வமாகிய சிவனுக்கும் அற்புதம் செய்யும் வல்லமை உண்டு என்பதை கிறிஸ்தவர்கள் அறிய வேண்டும். அப்படி சுகம் பெற்றதற்கு நானே சாட்சி என்றார்.

இயேசு கூறிய **நானே வழி, நானே சத்தியம், நானே ஜீவன், நானே வாசல்.** இந்த வாசல் வழியாய் பிரவேசிப்பவன் அல்லாமல் பரலோகம் செல்ல வேறு வழி இல்லை என்ற வேத வசனம் கிறிஸ்தவர்களாகிய நம்மை மற்ற மதங்களை சார்ந்த மக்களிடம் இருந்து பிரிக்கிறது. இந்த எண்ணம் மாற வேண்டும் என்றார்.

இதை வாசித்த அனைத்து C.S.I. கிறிஸ்தவர்களும் அதிர்ச்சியுற்று தங்கள் எதிர்பை தெரிவித்தனர். வெளி சபைகளிலிருந்தும் பிஷப்புக்கு எதிர்ப்பு கிளம்பியது. உடனே அந்த அறிக்கையை பிஷப் அவர்கள் வாபஸ் வாங்கினார். இது அவர் சாட்சியை இழக்க செய்தது.

**பிஷப் சாமுவேல் அமிர்தம்** அவர்களின் மகள் வெளிநாட்டில் கலியாணம் செய்து கணவரோடு **வாழாமல் போனதால்** பிஷப் அவர்கள் தன் பதவியின் சாட்சியிழந்து **வியாதிப்பட்டு** கால்கள் கைகள் செயல் இழந்த நிலையில் மரித்துப்போனார்.

இப்போது பிஷப் சாமுவேல் அமிர்தம் அவர்களின் ஆத்மா இயேசுவிடம் போகுமா? கற்பனை தெய்வமாகிய சிவனிடம் போகுமா ? சாட்சியையும் இழந்து தன் ஆத்மாவையும் இழந்த கிறிஸ்தவ பிஷப் இவர் ஒருவரே........ பரிதாபம் !



Most Rev. Gladstone

☐ அதே **தெற்கு கேரளா** C.S.I. டையோசிஸ் பிஷப்பும் CSI 24 டையோசிஸிக்கும் தலைமையான மாடரேட்டர் பதவி வகித்த Most Rev. Gladstone அவர்களின் மகன் **அமெரிக்காவில்** உயர்ந்த பதவியில் இருப்பவர். **கருப்பு இன பெண்ணை** திருமணம் செய்து **அமெரிக்காவிலேயே** தங்கிவிட்டார். பிஷப் அவர்களுக்கு அது பெருத்த அவமானமாகி போனது. இது கூடாமல் பெந்தே கோஸ்தே சபை பாஸ்டர் K.P. **யோகண்ணன் (பிலிவர்ஸ் சர்ச்)** அவர்களை **பிஷப்பாக** கான்சிகிரேஷன் செய்ய 12 **கோடிகளை** லஞ்ஜமாக பெற்றது அன்றைய **கேரள** பேப்பர், TV இவைகளில் வெளிவந்தது. இவர்கள் செய்த இந்த பெரும் தவறு குறிப்பாக முழு **தென் இந்திய திருச்சபை** C.S.I. மக்களுக்கு பிஷப் அவர்கள் பெரும் துரோகத்தை இழைத்து விட்டார். சில காலம் மனநோயால் பாதிக்கப்பட்டு இப்போது குற்ற மனசாட்சியுடன் சாட்சி இழந்து வாடுகிறார்.

# கன்னியாகுமரி C.S.I. டையோசிஸ்



Most Rev. Devakadatcham

கன்னியாகுமரி C.S.I. **டையோசிஸ்** பிஷப்பும், அனைத்து 24 C.S.I. சபைகளுக்கும் **தலைமை** பதவியான **மாடரேட்டர்** பதவி வகித்தவருமான Most Rev. தேவகடாட்சம் அவர்கள் தன் **மகன்** ஒரு **பெண்ணோடு** தொடர்பு கொண்டு அவளை **கர்பினியாக்கிவிட்டார்.** அவளை **மகன் திருமணம் செய்யாமல் அவளை கைவிட்டார்.** அந்த பெண் C.S.I. சபை **ஆயரின் மகள் ஆகும்.** பிஷப் அவர்கள் தலையிட்டு அவள் **கற்பத்தை கலைக்க பல லட்சங்கள்** செலவழித்து அவளை **வேறொரு வாலிபனுக்கு** நிறைய **டவுரி பணம் பிஷப் அவர்களே கொடுத்து** மறுமனம் செய்து தூர இடத்துக்கு அனுப்பிவிட்டார்.

**அந்த பெண்ணின் தகப்பனுக்கு நாகர் கோவிலில் மிகப் பெரிய சபையில் தலைமை ஆயர்** பதவிகொடுத்து ஆயர் அவர்களின் வாயையும் அடைத்தார். இவரும் K.P. **யோகண்ணானிடம்** ஒரு **கோடி ரூபாய்** வாங்கி அந்த பாஸ்டரை பிஷப்பாக்கினார்.

**மாடரேட்டர் தேவ கடாச்சம்** அவர்கள் காலத்தில்தான் C.S.I. சினாட்டில் **பலரை பிஷப்பாக ஆக்க அவர்களிடமிருந்து பல கோடிகள் லஞ்ஜமாக பெற்றுக்கொண்டபின்தான்** அவர்களை இவர் பிஷப்பாக்கினார். மாடரேட்டர் **தேவ கடாட்சம்** அவர்கள் **ஆரோனைபோல்** கணமான ஊழியத்தை சொந்த **மகனின் பாவ செயலாலும்** பதவியை பயன்படுத்தி பிஷப் பதவியை **பேரம் பேசி** பல கோடிகளை **லஞ்ஜ பணமாக** பெற்று தன் **சாட்சியை** இழந்தார்.

## தெற்கு கேரளா C.S.I. டையோசிஸ்



Most Rev. Dharmaraj Rasalam

திருவனந்தபுரம் C.S.I. டையோசிஸ் பிஷப்பும் இப்போதைய **24** CSI **டையோசிஸ்களுக்கும்** தலைமை பதவியில் (மாடரேட்டர்) உள்ள Most Rev. **தர்மராஜ் ரசாலம்** அவர்களின் **ஒரே மகள்** இந்து மத பையனை (இரகசிய திருமணம்) **ரிஜிஸ்டர் மேரேஜ்** செய்தார். இது **முதல் தாலி** கட்டியதாகும். கணவரின் குடும்பத்தாரின் கட்டாயத்தின்படி **இந்துமத கோவிலில்** வைத்து தாலி

கட்டினார். இது **இரண்டாம் தாலி** கட்டுதல் ஆகும்.

பிஷப் அவர்கள் கிறிஸ்தவ முறைப்படி CSI ஆலயத்தில் வைத்து 3வது முறை **தாலி கட்டி** மகளை அனுப்பிவைத்தார். இது இவர்களுக்கு **3வது தாலி** கட்டு ஆகும்.

இப்போது அந்த **இந்து மாப்பிள்ளை** அடிக்கடி பிஷப் அவர்களை **பணம் கேட்டு** பிஷப்புக்கு டார்ச்சர் கொடுக்க ஆரம்பித்தார். வேறு வழியில்லாது அவ்வப்போது பல லட்சங்கள் பணம் கொடுத்து அனுப்பினார் என்று கேள்விப்படுகிறோம்..

இந்த பணத்தை இவர் **டையோசிஸ்ஸிலும் மெடிக்கல் காலேஜிலும்** பல கோடிகள் **கணக்கில் வராத** பணமாக பெற்று செலவழித்தார் என்று கூறப்படுகிறது.

இப்போது இவர் CBIயிடம் வகையாக அகப்பட்டு நீதிமன்றம் பிஷப் அவர்களை குற்றவாளி என்ற தீர்ப்பை அறிவித்து **7 கோடி** ரூபாய் அபராத பணத்தை செலுத்த நீதிமன்றம் ஆணை பிறப்பித்தது. ஆனால் **பணம் அடைக்கவில்லை.** நான்காவது முறையாக **அக்டோபர்** மாதம் **நீதிமன்றம் எச்சரிப்பு** அறிக்கை அனுப்பியது.

**ஆரோனைப்போல** கனமான ஊழியம் **பிஷப் அவர்களுக்கு** அனுமதிக்கப்பட்டது. தன் சொந்த மகளின் செயலாலும், **மெடிக்கல் காலேஜ்** மாணவர்களிடம் **டொனேசன்** என்ற பெயரில் பெற்ற **பல கோடி ரூபாய்கள் பெற்ற** ஊழல் வழக்கினாலும் **பிஷப் அவர்களின் சாட்சி நஷ்டப்பட்டு** CSI சபையினருக்கு **பெருத்த அவமானமே** உண்டானது.

## ECI Church இந்திய சுவிசேஷ திருச்சபை



**பிஷப் எஸ்ரா சர்குணம்** அவர்கள்தான் இந்த சபைகளின் **ஸ்தாபகரும் தலைமை பிஷப்புமாக இருக்கிறார்.** இந்த சபை இந்தியா முழுவதிலும் சுமார் 7000 சபைகளாக மிக அருமையாக வளர்ந்து பெறுகியுள்ளது. இப்போதுள்ள CSI & CNI சபைகளை விட நல்ல ஆவிக்குரிய சபைகளாகவும் வளர்ந்துள்ளது. இந்த சபைகளில் பணிபுரியும் **ஆயர்களில்** உண்மையான முயற்சியும் **உழைப்பும்தான்** சபை வளர்ச்சிக்கு காரணம் என்றால் அது மிகை ஆகாது.

வளர்ந்துவிட்ட இந்த சபைகளை நிர்வகிக்க

சுமார் 5 அல்லது 6 பிஷப்மார்கள் இந்திய பகுதிகளை 6 பாகங்களாக பிரித்து அதன் தலைமையை ஏற்று திறமையாக சபைகளை கண்காணிக்கின்றனர்.

**பிஷப் எஸ்றா சர்குணம்** அவர்களின் ஆரம்ப கால ஊழியம் மிக சிறப்பானது. அவரின் உழைப்பினால் இந்த ECI சபைகள் **ஆலமரம்போல** வளர்ந்தது, அமெரிக்க பில்லி கிரஹாம் அவர்களோடு நெருங்கிய தொடர்ப்பு கொண்டதால் இவரின் **இந்திய சபைகளில்** வளர்ச்சியை அறிந்து இவர் ஊழியத்துக்கு பண உதவியையும் அவர் செய்தார்.

**வேறு சில வெளி நாட்டு** கிறிஸ்தவ ஸ்தாபனங்களின் **பண உதவியும்** இவருக்கு கிடைத்ததால் இந்த ECI சபைகள் மிகவும் செழிப்படைந்தன. ஏராளமான சமூக சேகைள் ECI சபைகள் மூலமாகவே நடைபெறுகிறது. தமிழ்நாட்டிலும், வட இந்தியாவலும் ஏழை பிள்ளைகள் ஆனாதை பிள்ளைகளுக்கு பெரும் உதவிகள் நடைபெறகிது.

வட இந்திய கிராம பெண்களுக்கு சுயதொழில் செய்ய நல்ல ஏற்பாடுகள் நடைபெறுகிறது. இந்த சமயத்தில் பிஷப் **எஸ்றா சற்குணம்** அவர்கள் தமிழ்நாட்டின் DMK கட்சி தலைவர் **கலைஞர் கருணாநிதியின்** செல்லப்பிள்ளை ஆனார். மேடையில் கலைஞரின் **அருகே அடுத்த நாற்காலியில்** அமரும் செல்வாக்கை பெற்றார். அப்படியே அரசியல் புத்தியும் அவருக்குள் புகுந்துகொண்டது. அதனால் இவர் **ஆவிக்குரிய ஜீவியத்தை** இழந்துபோனார்.



பிஷப் எஸ்றா சற்குணத்துக்கு இரண்டு மகள்கள் உண்டு. அதில் ஒரு மகள் **கதிரொளி மாணிக்கம்.** அப்பாவின் **அரசியல் புத்தி** அவரையும் ஆட்கொண்டது. ECI சபைகளுக்கு ஏராளமான **சொத்துக்கள், நிலங்கள்** அளவில்லாமல் பெறுகின. பிஷப் எஸ்றா சற்குணம் அவர்கள் ECI சபைகளை நிர்வகிக்க நிறைய பிஷப்மார்களை ஞானமாக ஏற்பாடு செய்திருந்தாலும் பிற்காலத்தில் தன் ECI **சபைகளின்** சொத்துக்கள் **மற்றவர்களின் கைக்கு போய்விடாமல்** இருக்க தன் மகள் **கதிரொளி மாணிக்கம்** அவர்களை அவசரமாக பிஷப் **கமிசரி** என்ற பதவியில் அமர்த்தினார். அது பிஷப்புக்கு **சமமான அதிகாரம்** உள்ள பதவியாகும், ஆனால் தன் மகள் முன்கோபக்காரியும், **உடைகளை மாற்றுவதைப்போல் கணவர்களையும் மாற்றும்** பலவீனமானவர் என்பதை அறிந்தும் அந்த பதவியை அவருக்கு கொடுத்தார். இவருக்கு மூன்று **கணவன்மார்கள்** உண்டு. **இரண்டு கணவர்களை** மட்டும் ECI சபை **ஆயர்கள்**

அறிவார்கள். முதல் கணவனைப்பற்றி வேதாகம கல்லூரி லெக்சர்களும், நானும் மட்டும் அறிவோம். மேற்படிப்புக்கு என்று வெளிநாடு சென்றவர்களுக்குள் **மனமுறிவு** ஏற்பட்டபின் மகள் மட்டும் இந்தியா திரும்பினார் என்று எனக்கு செய்திகள் வந்தன. இப்போது **மூன்று நபர்களும் உயிரோடு இருக்கின்றனர். மூன்றாவது திருமணம் நடந்தது.** அந்த நபர் ஒரு **கத்தோலிக்க** சபையை சேர்ந்தவர்.

CSI & ECI சபைகளின சட்டப்படி கத்தோலிக்க சபையில் இருந்த ஒருவர் ECI சபையை சேர்ந்த ஒருவரை திருமணம் செய்ய வேண்டுமானல் அவர் **சபைகளுக்குமுன்** பகிரங்க **மன்னிப்பு** கேட்க வேண்டும். கத்தோலிக்க சபையின் சகலவித பிசாசின் **உபதேசங்களை** விட்டுவிடுகிறேன் என்று பகிரங்கமாக அறிக்கை செய்ய வேண்டும். இவைகளில் ஒன்றும் செயல்படுத்தாமல் **நேரடியாக தாலி கட்டுதல்** நடந்தது. இப்படிப்பட்ட க**லியாணத்துக்கு** தலைமை தாங்க **பால் தினகரன்** அழைக்கப்பட்டார். திருமணம் முடிந்தது.

இப்போது Rev. கதிரொளி மாணிக்கம் அவர்களின் **ஆதிக்கம் ஆரம்பத்தது,** இவரின் இந்த **சாட்சியில்லாத திருமணங்களை** ஏற்றுக்கொள்ள இயலாத மனசாட்சியில் மிகவும் வேதனைப்பட்ட **இவர்களுடைய ECI பிஷப்பமார்களில்** ஒருவர் **கதிரொலி மாணிக்கம்** அவர்களின் டார்சர் தாங்காமல் பிஷப் **பதவியை ராஜீனாமா** செய்து சப்தமில்லாமல் மிக நாகரீகமாக விலகினார். இந்த சூழ்நிலையில் ECI சபைகளின் **சீனியர் ஆயர்கள்** ஒன்றுகூடி **பிஷப் எஸ்றா சற்குணம்** அவர்களுக்கு **பிஷப் கமிஷனரியான** கதிரொளி மாணிக்கத்தை சபையில் இருந்தும் பொறுப்பில் இருந்தும் நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். நீங்கள் கஷ்டப்பட்டு உருவாக்கிய ECI திருச்சபையை **காப்பாற்றுங்கள்.** சபை மக்கள் உங்கள் மகளைப்பற்றி **கேட்கும் கேள்விகளுக்கு** எங்களால் பதில் சொல்லமுடியாமல் தவிக்கிறோம் என்றார்கள்.

**ஸ்தாபகரும்** தலைமை பிஷப்பமான எஸ்றா சற்குணம் அவர்கள் காது கேளாதவர்போல் ஆனார். மேலும் ECI சபையின் **அதிகாரபூர்வமான** பத்திரிகையான **நிருபம்** பத்திரிகைக்கு கதிரொளி மாணிக்கத்திற்கு தலைமை **ஆசிரியர்** Chief Editor பொறுப்பை கொடுத்தார். மற்ற பிஷப்மார் **சபை உடைந்துபோகுமே** என்றும் **பிஷப் எஸ்றா சர்குணம்** அவர்கள் மேல் உள்ள **மரியாதையால்** வாயடைத்து அவரவர் வேலையை மட்டும் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் மனசாட்சியுள்ள **சீனியர் ஆயர்கள்** மட்டும் **நான்கு பக்க துண்டு பிரதி** அச்சிட்டு **எல்லா தலைமை ஆயர்களுக்கும்** அனுப்பி இனி **கதிரொளி மாணிக்கம்** (பிஷப் கமிஷனரியை) எந்த சபையிலும் **எந்த நிகழ்ச்சிக்கும்** அழைக்கக் கூடாது என்று **சபை கமிட்டியாக** கூடி தீர்மானம் நிறைவேற்றி அதை **மினிட்ஸ் புத்தகத்தில் பதிவு செய்து** தலைமைக்கு அனுப்ப ஏற்பாடு செய்தனர்.

**பெண்களுக்கும் வாலிபர்களுக்கும்,** ஆயர்களுக்கும் முன் மாதிரியாக இருக்க வேண்டிய ஒருவர் இப்படி சாட்சி கெட்ட நிலையில் நம் ECI சபை எங்கும் **பிரவேசிக்க** கூடாது என்று **ஏகமனதாக கையெழுத்திட்டு** அதை செயல்படுத்தவும் தொடங்கிவிட்டனர். இதில் பிஷப் **எஸ்றா சர்குணத்துக்கு** ஆதரவாக உள்ள ஒரு **கூட்டமும் உண்டு.** இனி ECI சபைகளின் நிலை எப்படியிருக்க போகிறதோ! **ஆரோனைபோல் கனமான** ஊழியத்தின் **பொறுப்பை கர்த்தர்** பிஷப் **எஸ்றா சர்குணம்** அவர்களுக்கு அனுமதித்தார். ஆனால் **மகளின் மேல்** உள்ள **பாசத்தால் சாட்சியிழந்து நிற்கிறார்.** ஜெபிப்போம்.

> ☐ இதன் காரணம் மகளின் **வளர்ப்பு சரியில்லை. பிஷப்பானவன் தன்சொந்த குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால் தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான் ? பிஷப்பானவன் (தமிழில் கண்காணி) ஒரே மனைவியை உடையவனும் தன்சொந்த குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும். தன் பிள்ளைகளை** நல்ல ஒழுக்கம் உள்ளவர்களாக, கீழ்படிய பண்ணுகிறவனுமாய் இருக்க வேண்டும். (1 தீமோ 3:5, 1 தீமோ 3:2,4)

கர்த்தர் தாமே ECI சபை மக்களையும் **மனசாட்சியுள்ள தலைமை ஆயர்களையும்** ECI **சபைகளின் அனைத்து பிஷப்மார்களையும்** கைவிடாதபடி ஆசீர்வதித்து வழிநடத்துவராக.

பல வருடங்களுக்கு முன்பே **பிஷப் எஸ்றா சர்குணம்** அவர்களின் மகள் **கதிரொளி மாணிக்கம் அவர்களின் சாட்சியில்லா வாழ்க்கைப்பற்றி ஸ்தாபகருக்கும்கடிதம் எழுதி ஜாமக்காரனிலும்** எழுதி எச்சரித்தேன். ஜாமக்காரன் பணி ECI சபை விஷயத்தில் இந்த கட்டுரை எழுதியதால் முடிந்தது.

ECI சபைகள் உடையாமல் இருக்க வாசகர்கள் ஜெபிப்போம்.

☐ வேதத்தில் 1 சாமுவேல் 3:13ல் **ஏலி** என்ற ஆசாரியன் இருந்தான். **சாமுவேல்** சிறுவனாக இருக்கும்போதே ஆலய பணிவிடைகளுக்கு ஏலிக்கு உதவியாக அவன் பெற்றோர் ஆலயத்திலேயே அவனை விட்டுபோனார்கள். கர்த்தர் சாமுவேலோடே பேசினார். அவன் அதை அறியாமல் இருந்தான். அப்போது ஏலி சாமுவேலிடம் மறுபடியும் கர்த்தர் உன்னை பெயர் சொல்லி அழைத்தால் **அடியேன் இதோ கேட்கிறேன்** என்று கடவுளிடம் பேச கற்றுக்கொடுத்தார். கர்த்தர் சாமுவேலோடு பேசி ஏலியன் குமாரர்கள் ஆலயத்தில் அக்கிரமம் செய்கிறார்கள். ஆலயத்துக்கு வரும் பெண்களுடன் தவறான தொடர்பு கொண்டு பலிபீடத்தை கறை படுத்துகிறார்கள்.அவர்களை கண்டித்து வைக்கச்சொல் என்று கூறுனார். ஆனால் ஏலி தன் பிள்ளைகளை கண்டிக்கவில்லை. வசனம் இப்படி கூறுகிறது.

**அவன் பிள்ளைகளை அடக்காமல்போன பாவத்தினிமித்தம் நான் அவன் குடும்பத்துக்கு என்றும் நீங்காத நியாயத் திர்ப்பு செய்வேன் என்றார்.** ஏலி 98

வயதுள்ளவனாய் இருந்தான், **ஏலி ஆசானத்திலிருந்து** மல்லாக்க விழுந்து அவன் கழுத்து பிடரி முறிந்து செத்துப்போனான். 1 சா. 4:18

அன்பானவர்களே !

ஏலியின் மரணம் ஒரு பாடமாக இருக்கட்டும்.

**சாமுவேலுக்கு** கர்த்தர் பேசுவதை அறிய கற்றுக்கொடுத்தவர், அதோடு கர்த்தரிடம் பேசவும் கற்றுக்கொடுத்தவர், தான் பெற்ற பிள்ளைகளை அடக்காமல்போன **பாவத்தினிமித்தம்** எலியின் முடிவு மிக மோசமான முடிவு ஆயிற்று. பிள்ளைகளை பெற்றோர் கண்டிக்காமல் போனால் **அது பாவம்** என்று கர்த்தர் கூறுகிறார்.

- ☐ மேலே வாசித்த அனைத்து பிஷப்மார் வாழ்க்கையிலும் தன் பிள்ளைகள் கர்த்தரைவிட்டு விலகி போகிறார்கள் என்பதை ஆரம்பத்திலேயே அறிந்து கண்டித்திருக்க வேண்டும். அவர்களை **அடக்காமல் போன பாவத்தினிமித்தம்** பிஷப் சமாதானம் இழந்து தவறானவிதத்தில பணம் பெற்று பிஷப் குடும்பமும் கர்த்தரை விட்டு விலகி **சாட்சி இழந்து போனார்களே !**

இவர்கள் தங்கள திருமண்டலத்துக்கு என்ன பிரசங்கம் செய்வார்கள். இவர்கள் ஆலயத்தில் **கலியாணம்** நடத்தி வைக்கும்போது **மணமக்களுக்கு** என்ன ஆலோசனை கூறுவார்கள்.

**தேவன் தம்மை பரியாசம் பண்ணவொட்டார்.**

**ஜாமக்காரன்**

இப்போது சொல்லுங்கள் நான் இதுவரை எழுதியதில் **பொய்** உண்டா? **தவறு** உண்டா?

இந்த கனமான ஊழியத்தை பெற்ற பிஷப்மார் இன்னும் பலர் உண்டு. இத்துடன் ஜாமக்காரனின் பணி ( Mission ) முடிவு பெறுகிறது. கர்த்தர் என் **ஆயுளையும்** என் **ஆரோக்கியத்தை** திரும்ப கொடுத்தால், தெய்வம் அனுமதிக்கும் வரை இந்த ஊழியத்தை நிறைவேற்றுவேன். ஜெபிக்கிறேன். ஜெபிக்கவும்.

## ONLINE BANKING (NEFT)

**Dr. M.G.E. PUSHPARAJ**, **SALEM - 636 005. INDIA**

**STATE BANK OF INDIA** (SALEM-1970)

**A/C No: 10764116842** SWIFT CODE - SBININBB637- 10764116842

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

**A/C No: 1219101013622.** SWIFT CODE - CNRB0001219 -1219101013622.

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622.

# மத்திய கேரளா C.S.I. டையோசிஸ்

## ஜாமக்காரன் மலையாள வாசகர்களுக்கு

என்னை மிகவும் நேசிக்கும் டையேசிஸ் வாசகர்களில் மிக முக்கியமானவர்கள் நீங்கள் ஆகும். உங்கள் டையோஸ்ஸில் **பிஷப் எலக்ஷன்** நடந்து 3 ஆயர்கள் வரிசையில் இருக்கிறார்கள். 3 ஆயர்களுக்கும் நான் பிரதானமாக கூறும் ஆலோசனை என்னவென்றால் உங்கள் பெயர்கள் CSI சினாட் பரிசீலனைக்கு சென்னைக்கு போகும். அங்குதான் **பிஷப்** தெரிந்தெடுக்க **பேரம்** நடைபெறும். இப்போதுள்ள நிலையில் **தலைமை ஸ்தானத்தில்** உள்ள நபர் மிகவும் **பண நெருக்கத்தில்** உள்ளார். இப்போது அவருக்கு **பல கோடி ரூபாய்கள்** மிக அவசரமாக தேவைப்படுகிறது. **நீதிமன்றம்** அவருக்கு நான்காவது நோட்டீஸ் அனுப்பி **கையாடல் செய்த பல கோடி ரூபாய்களுடன்** அபராத தொகையும் சேர்த்து உடனடியாக **நீதிமன்றத்தில்** அடைக்கும் படி கட்டளையிட்டுள்ளது .ஆகவே மாடரேட்டர் அவர்கள் இக்கட்டான நிலையில் இருக்கிறார். உங்களுக்குபின் **பண பலம்** உள்ளவர் உங்கள் பின்னால் இருக்கிறார்கள். இவர்களில் யார் மாடரேட்டர் சார்பில் கேட்கும் பெரும் **தொகையை** கொடுக்கிறார்களோ அவரை மாடரேட்டர் **பிஷப்பாக** அறிவிப்பார். **அதிக ஓட்டு, மெரிட்** எதையும் இவர்கள் பார்க்கமாட்டார்கள்.

உங்கள் டையோசிஸ்ஸின் முன்னாள் பிஷப்பும், மாடரேட்டருமான Most Rev. Thomas K. Oomman அவர்கள் ஆயர்கள் கூட்டத்தில் கூறினாராம். **நான் ஒருவன் மட்டும்தான்** பிஷப் பதவிக்காக **பணம் கொடுக்காது** பிஷப் ஆனவன் என்றாராம். அப்படியானால் இதுவரை பிஷப்பாக பதவி ஏற்றவர் எல்லோரும் பணம் கொடுத்துதான் பிஷப்பாக பதவி பெற்றார்கள் என்பது அவர் வாய்மொழிமூலம் உண்மை என்பது உறுதியாகிறது.

இப்போது நீங்கள் எடுக்கும் திடமான தீர்மானம் மிக முக்கியம். பிஷப் பதவியை பணம் கொடுத்து வாங்கப் போகிறீர்களா? பணம்கொடுத்து **பிஷப் பதவி** வாங்கும் **கேடுகெட்ட நிலை** எங்களுக்கு வேண்டாம் என்று பிஷப் **பதவியை** சினேட்டிலேயே தூக்கி எறிந்து சாதாரண **ஆயராகவே** ஊழியம் செய்கிறேன் என்று கூறப்போகிறிர்களா? நம் **மத்திய கேரள டையோசிஸ்ஸின்** மானம் மரியாதை உங்கள் **3 ஆயர்களின்** கையில் இருக்கிறது. உங்ளுக்காக ஜெபிக்க தொடங்கிவிட்டேன்.

**கர்த்தாவே உம்மை பிரியபடுத்த என்னை போதித்தருளும். சங். 143:10**

## மார்தோமா சபைகளின் மிக உயர்ந்த பதவி மெத்ரோ போலித்தா எனப்படும் (மாடரேட்டர்) அந்த மெத்ரோபோலிதா மரித்துபோனார்

**2020 அக்டோபர்** 19ம் தேதி அவர் மரித்து போனதாக செய்தி வந்தது. 2020 செப்டம்பர் மாத ஜாமக்காரனில் பக்கம் 9ல் **சாட்சியிழந்த பிஷப்மார்** வரிசையில் மரித்த **மெத்ரோபோலித்தாவை** குறித்தும் எழுதியிருந்தேன். அதே பத்திரிக்கையில் அவரின் **மரண செய்தியும்** எழுதும் நிலை வந்தது, இவைகளை வாசித்த மார்த்தோமா சபை ஆயர்கள், சபை மக்கள் யாவருக்கும் என் மேல் வெறுப்பு தோன்றும் என்று அறிவேன், அதுமட்டுமல்ல சாதாரணமாக பெரிய ஊழியர்களின் மரணவிவரம் அறிவிக்கும் போது **கர்த்தருக்குள் மரித்தார்** என்று மரியாதையாக எழுதுவது வழக்கம்.

ஆனால் மரித்த மெத்ரோபோலித்தா அவர்கள் தன் மரணத்தின் கடைசி நிமிடம் வரை கடந்த காலத்தில் தான் செய்த பாவம், பழிதீர்த்தல், மன கசப்பு ஆகியவற்றிர்க்கு மனஸ்தாபப்பட்டதாக அருகில் இருந்தவர்கள் ஒருவரும் தெரிவிக்கவில்லை என்றாலும் மரணத்தின் கடைசி நிமிடத்தில் **கள்ளனுக்கு மன்னிப்பு** அருளிய கர்த்தர், மரணத்தின் வாசலில் மன்னிப்பு பெற்ற **சிம்சோன்** போன்றவர்களின் முடிவை காணும்போது ஒருவேளை இவர் **மனதிற்குள்** மன்னிப்பு கேட்டிருந்தால் மன்னிப்பு கிடைத்திருக்குமே! இப்போது **மெத்ரோபோலித்தாவின்** ஆத்துமா எங்கு போயிருக்கும்? நான் **தீர்ப்பு** சொல்லவில்லை **தீர்ப்பு சொல்ல நான் யார்**? யாராலும் **தீர்ப்பு சொல்ல முடியாது,** தீர்ப்பு **சொல்லவும் கூடாது.** ஆனால் யூகிக்கலாம் அவரின் கடந்த கால செயல்கள் **ஆயராக** ஊழியம் தொடங்கி **பிஷப்பாக** பதவி உயர்வு பெற்று, கடைசியாக **தலைமை** பதவியில் **மெத்ரோபோலித்தா** என்ற உயர்வு வரை நடந்த அடுக்கடுக்கான சம்பவங்களை வெளியில் இருந்து கேள்விப்பட்ட எனக்கே உள்ளத்தில் **வெறுப்பு** உண்டாகும்போது அவரால் பாதிக்கப்பட்ட **டீச்சர்கள், ஆயர்களின் மனைவிமார்கள் 3 வயது பெண்பிள்ளை, 11 வயது சிறுமி** இவர்களை பெற்றவர்கள் 3, 5 வயது பாதிக்கப்பட்ட பிள்ளைகள் வளர்ந்து **வாலிபமாகி** திருமணமும் செய்த நிலையில் அந்த பெண்கள் வளர்ந்து திருமணமாகி அவர்கள் பிள்ளைகளை பெற்ற நிலையில் இவர்களை நேரில் போய் சந்தித்து **மெத்ரோபோலித்தாவின்** மரணத்தைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்டுபாருங்கள், ஒன்றும் பதில் கூறமாட்டார்கள் தன் கணவன், தன் பிள்ளைகள் யாரும் அவைகளைகுறித்து அறியாத நிலையில் தன் உள்ளத்தின் வெருப்பை எப்படி **பிரதிபலிக்க** முடியும். ஆனால் மனதில் அவன் **மரித்தது நல்லது** என்று மனதிற்குள் நினைத்து **சபித்து** இருப்பார்கள்,

எப்படியோ மரித்த **மெத்ரோபோலித்தாக்காகவும் இயேசு இரத்தம்** சிந்தியிருக்கிறார். அவர் இரத்தம் எப்படிபட்டவரையும் கழுவும். அப்படியாக கிருஸ்துவின் கிருபை அவரையும் மன்னிக்கும். இவரின் கடந்தகால **வாழ்க்கை** இவர் **மரணம்** இப்போதுள்ள பிஷப்மார் **யாவருக்கும்,** நமக்கும் பாடமாக அமையட்டும்.

## எச்சரிக்கை

Whatsapp, Face Book, You-Tube போன்ற எதுவும் எனக்கு கிடையாது. என் பெயரில் யாராவது மேலே கூறியவற்றில் ஏதாவது எழுதினால் அதற்கும் எனக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்பதை அறிவிக்கிறேன்.



## சகோ. சாது செல்லப்பா அவர்கள் கர்த்தருக்குள் மரித்தார்

சகோ. சாது செல்லப்பா அவர்கள் தனது 81வது வயதில் கேன்சர் வியாதியால் சிகிச்சை பலனின்றி மரித்துப்போனார். அவரின் மனைவி பிள்ளைகள் யாவருக்கும் கர்த்தர் ஆறுதல் அளிப்பாராக.

மரிக்கும் முன் 3 முறை என்னிடம் தொலைபேசியில் பேசினார். அதில் மலேசியா விவரத்தையும், இன்னும் பல விவரங்களையும் பகிர்ந்து கொண்டார். ஜெபிப்போம். சகோதரர் ஊழியம் மூலமாக இயேசுவை குல தெய்வமாக ஏற்றுகொண்ட இந்து மதத்தினர் , பிராமண ஜாதியில் உள்ள ஏராளமான குடும்பங்கள் இன்றும் சாட்சியுடன் வாழ்கின்னர். சகோதரனின் விததியாசமான ஊழியங்களுக்காக நான தெய்வத்தை துதிக்கிறேன்.

**SEPTEMBER-2020**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.